

# மனநல ஆற்றல் சட்டம்

## செயல்முறைகள் – ஒரு பார்வையில்

வழக்கமான மனநல ஆற்றல் சட்ட (எம்.சி.ஏ) நடவடிக்கைகளைப் பற்றி, நீங்கள் மேலும் அதிக அளவில் புரிந்துக் கொள்ளவும் எவ்வாறு செயல்படலாம் என்பதைப் பற்றியும் இந்த துண்டுப்பிரசுரம் விவரிக்கிறது.
www.judiciary.gov.sg, - இல், எளிமையாக்கப்பட்ட செயல்முறை மற்றும் வழக்கமான செயல்முறை குறித்த மனநல ஆற்றல் சட்ட விண்ணப்ப பட்டியலைக் காண்க. நோயாளிக்காக முடிவு எடுக்க உதவி புரியும், துணை அதிகார வழங்குநரின் நியமனம் குறித்து, எதிர்ப்பு இல்லாத பட்சத்தில், உங்கள் மனநல ஆற்றல் சட்டம் (எம்.சி.ஏ) தொடர்பான விண்ணப்பம் எளிமையாக்கப்பட்ட செயல்முறைப்படி நடைபெறும். துணை அதிகார வழங்குநர் நியமனம் குறித்து, அல்லது மற்ற விஷயங்கள் பற்றி அக்கறை இருந்தாலோ, நீங்கள் நாடும் அதிகாரம் எளிமையாக்கப்பட்ட செயல்முறையின் எல்லைக்கு அப்பாற்பட்டதாக இருந்தாலோ, நீங்கள் வழக்கமான செயல்முறைப்படியே உங்களுடைய மனநல ஆற்றல் சட்டத்துக்கான விண்ணப்பத்தைத் தாக்கல் செய்ய வேண்டும்.

# மனநல ஆற்றல் சட்டம் (எம்.சி.ஏ)

மனநல ஆற்றலை இழந்த ஒருவர், அவரின் சார்பில் முடிவெடுக்க ஒரு “அதிகாரம் பெறுநர்” அல்லது “துணை அதிகாரம் பெறுநர்” ஒருவரை நியமிக்க எம்.சி.ஏ அனுமதி அளிக்கிறது.



## மனநல ஆற்றல்சட்ட த்தின் (எம்.சி.ஏ) கீழ், நோயாளி எனப்படுபவர் யார்?

- மனம் அல்லது மூளையின் செயல்பாட்டில் குறைபாடு அல்லது இடையூறு காரணமாக முடிவுகளை எடுக்க மனநல ஆற்றல் குன்றிய ஒரு நபர்.

*மனநல ஆற்றல் குறைபாடு ஓர் அதிகாரப்பூர்வ மருத்துவ அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும்.*

## ஒருவர் எப்போது எம்.சி.ஏ விண்ணப்பத்தைச் செய்ய வேண்டும்?

ஒரு நபர் எம்.சி.ஏ விண்ணப்பத்தைச் செய்ய வேண்டிய சூழ்நிலை:

- மனநல ஆற்றலை இழந்த ஒரு நண்பர் அல்லது உறவினரின் சார்பில், சட்டப்பூர்வ அதிகாரத்தைக் கொண்டு முடிவுகளை எடுக்க நீதிமன்றத்தால் “துணை அதிகாரம் பெறுநர்”ஆக விருப்பப்பட்டால்.

## விண்ணப்பதாரர்கள்/துணை அதிகாரம் பெறுநர்கள் செய்யக்கூடியவையும் செய்யக்கூடாதவையும்

| விண்ணப்பம் செய்வதற்கு முன்பு | நீதிமன்ற உத்தரவுப் பெற்றப் பிறகு |
|---|---|
| ✔ விண்ணப்பம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அனைத்து தகவல்களும் கொடுக்கப்பட்டுள்ளதை உறுதிச்செய்ய வேண்டும். | ✔ பொதுக் காப்பாளரிடம் அறிக்கைகளை நேரத்தோடு தாக்கல் செய்யுங்கள். |
| ✔ துணை ஆவணங்கள் கொடுக்கப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும். | ✔ உத்தரவைப் பின்பற்றி நீங்கள் செய்ய வேண்டியதை செய்யுங்கள். |
| ✔ சம்மந்தப்பட்ட நபர்களின்சம்ம தத்தை பெற்றுக்கொள்ளுங்கள். | ✘ உங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் எல்லைக்கு வெளியே முடிவுகளை எடுக்கவோ அல்லது நடவடிக்கைகளை எடுக்கவோ வேண்டாம். |
| ✔ எளிமையாக்கப்பட்ட முறையின் கீழ் விண்ணப்பத்தை நீங்கள் தாக்கல் செய்கிறீர்கள் என்றால், நீங்கள் நாடும் அதிகாரங்கள் அதன் கீழ் வருகிறதா என்ப தை சரிபார்க்கவும். | ✘ நோயாளியின் சொத்தை அன்ப ளிப்பாக பிறருக்கு வழங்க வேண்டாம். |

## படி 1
# விண்ணப்பிக்கும் முறையைத் தேர்ந்தெடுப்பது

### எளிமையாக்கப்பட்ட முறை

*நீங்கள் கட்டாயமாக...*

- விண்ணப்பிக்கும் முன் சம்பந்தப்பட்ட நபர்களின் சம்மதத்தை பெற வேண்டும்.
- உங்களுடைய விண்ணப்பத்தையும், தேவையான ஆவணங்களையும் குடும்ப நீதிமன்றத்தின் ஒருங்கிணைந்த வழக்கு நிர்வாக மின் முறைப்படி (iFAMS) தாக்கல் செய்யுங்கள்.

*குறிப்பு: பொதுவாக நோயாளியின் இருப்பிலிருந்து $60 000-க்கும் அதற்கும் குறைவானத் தொகை மட்டுமே பயன்படுத்தக் கட்டுப்படுத்தப்பட்டது. எளிமையாக்கப்பட்ட முறையின் கீழ் உள்ள எம்.சி.ஏ உத்தரவுகளின் பட்டியலைக் காண QR குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்.*

SG COURTS

### வழக்கமான செயல்முறை

*பின்வரும் சூழ்நிலை பொருந்தினால்...*

- உங்கள் விண்ணப்பத்தை எவரேனும் எதிர்க்கிறார்கள்; அல்லது
- நீங்கள் வேண்டும் அதிகாரங்கள் எளிமையாக்கப்பட்ட செயல்முறையின் எல்லைக்கு அப்பால் வருகிறது

*நீங்கள் கட்டாயம்...*

- சேவை பணியகம் (service bureau) மூலம், உங்களுடைய விண்ணப்பத்தையும் தேவையான ஆவணங்களையும் குடும்ப நீதிமன்றங்களுக்குச் சமர்ப்பிக்கவும்.

*அடுத்து என்ன நடக்கும்?*

## படி 2
### மருத்துவ அறிக்கையைப் பெற வேண்டும்

- மனநல ஆற்றல் இழப்புக்குச் சான்றளிக்க மருத்தவரிடமிருந்து மருத்துவ அறிக்கையைப் பெறுங்கள்.
- இணைய செயல்முறை அமைப்பின் வாயிலாக அல்லது கையெழுத்திடப்பட்ட சத்தியப் பிரமாணப் பத்திரத்தின் மூலம் அறிக்கையை மருத்துவர் வழங்கலாம்.


## படி 3
### விண்ணப்பத்தை தாக்கல் செய்தல்




- படிவத்தை பூர்த்தி செய்து, தேவையான ஆவணங்களைச் இணைய செயல்முறை அமைப்பு வழியாக சமர்ப்பிக்கவும்.

## படி 4
### சம்மதம்

- சம்பந்தப்பட்ட நபர்கள் (எ.கா. நோயாளியின் நெருங்கிய குடும்பத்தார்) அவர்கள் விண்ணப்பத்திற்கு சம்மதிக்கிறார்கள் என்பதைக் குறிக்க சிங்பாஸ் (SingPass) வழியாக உள்நுழையலாம்.
- மாறாக, விண்ணப்பதாரர், இந்த நபர்களுக்கு விண்ணப்பப் படிவத்தையும், இதைச் சார்ந்த மற்ற ஆவணங்களையும் சார்வு செய்து, அவ்வாறு செய்ததாக கூறும் உறுதிமொழி படிவத்தை iFAMS வழி தாக்கல் செய்யலாம்.



## படி 5
### நீதிமன்ற நடவடிக்கைகள்

- நீதிமன்றத்திற்கு விளக்கம் தேவைப்பட்டால், மேலும் ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு அல்லது நீதிமன்றத்திற்கு வருமாறு விண்ணப்பதாரர் கேட்டுக்கொள்ளப்படலாம்.
- மேலும் விளக்கங்கள் தேவையில்லை என்றால், நீதிமன்றம் விண்ணப்பதாரருக்கு மின்னஞ்சல் மூலம் உத்தரவை அனுப்பும்.
- ஆகையால், விண்ணப்பதாரர் தனது விண்ணப்பப் படிவங்களில் செல்லத்தக்க மின்னஞ்சல் முகவரியை வழங்குவதை உறுதி செய்வது அவசியம்.

## படி 6
### தாக்கல் செய்வது



- பொதுக் காப்பாளரிடம் அறிக்கைகளைத் தாக்கல் செய்யுங்கள்.

*நீங்களாகவே விண்ணப்பத்தை சுயமாக தாக்கல் செய்வீர்களா அல்லது ஒரு வழக்கறிஞரின் உதவியுடன் செய்வீர்களா?*

### சுயமாகத் தாக்கல் செய்வது

## படி 2
### உங்கள் ஆவணங்களைத் தயாரித்தல்

- முதலேட்பு ஆணைகள்: நீங்கள் எந்த வகையான அதிகாரங்களை நாடுகிறீர்கள் என்பதை தெளிவாகக் குறிப்பிடவும்.
- விண்ணப்பதாரரின் சத்தியப் பிரமாணப் பத்திரம்: வழக்கு தொடர்புடைய உண்மைகளை தெரிவிப்பதுடன் துணை ஆவணங்களையும் முன் வைக்கவும்.
- மருத்துவரின் சத்தியப் பிரமாணப் பத்திரமும், மருத்துவ அறிக்கையும்: மருத்துவ அறிக்கை தற்போதையதாகவும் மற்றும் விண்ணப்பத்திற்கு 6 மாதங்களுக்கு மிகாமல் தேதியிட்டதாகவும் இருக்க வேண்டும்.
- ஒப்புதல்கள்: உரியவரிடம் இந்த விண்ணப்பத்தைப் பற்றி தெரிவியுங்கள். அவர்களிடமிருந்து கையொப்பமிட்ட ஒப்புதலைப் பெறுங்கள்.

### ஒரு வழக்கறிஞரின் உதவியுடன்

## படி 2
### சட்ட உதவி நாடுவது

- உங்களுக்காக விண்ணப்பத் தாக்கல் செய்வதற்கு ஒரு வழக்கறிஞரை நீங்கள் நியமிக்கலாம். உங்களுக்கு வழக்கறிஞர்களின் பட்டியல் தேவைப்பட்டால், சிங்கப்பூர் சட்டக் கழகத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.
- நீங்கள் சிங்கப்பூர் குடியுரிமை பெற்றவராகவோ நிரந்தரவாசியாகவோ இருந்து, வருமானம் மற்றும் தகுதிக்கான வரம்பு சோதனைக்கு உட்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டால், நீங்கள் சட்ட உதவி பெற விண்ணப்பிக்கலாம்.



## படி 3
### ஆவணத் தாக்கல்



- கிரிம்சன்லோ ஜிக் சேவை பணியகத்தில் (CrimsonLogic Service Bureau), அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்யுங்கள்.

## படி 4
### நீதிமன்ற நடவடிக்கைகள்

- வழக்கிற்கான கலந்தாய்வு கூட்டத்திலும், விசாரணையிலும் நீங்கள் ஆஜராக வேண்டும்.
- விசாரணைகளின் முடிவுக்குப் பிறகு, ஓர் உத்தரவு வழங்கப்படும்.
- அதன் பின்னர், உத்தரவின் பிரதி எடுப்பதற்கான விண்ணப்பத்தை கிரிம்சன்லோ ஜிக் சேவை பணியகத்தில் (CrimsonLogic Service Bureau), தாக்கல் செய்யவும்.

## படி 5
### அறிக்கைக்கான தாக்கல்

- உங்கள் அறிக்கைகளைப் பொது காப்பாளரிடம் தாக்கல் செய்யுங்கள்.

# வேறொருவர் தாக்கல் செய்த விண்ணப்பத்திற்கு, நீங்கள் எதிர்ப்புத் தெரிவிக்க விரும்பினால் என்ன நடக்கும்?

*நீங்கள் செய்ய வேண்டியவை...*

| எளிமையாக்கப்பட்ட செயல்முறை | வழக்கமான செயல்முறை |
| --- | --- |
| • வழக்கு முடிவதற்கு முன்பே, நீங்கள் 'iFAMS' வழியாக எதிர்ப்புத் தெரிவிக்கும் அறிக்கையைப் பதிவு செய்ய வேண்டும். | • ஒரு தரப்பினராக உங்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பத்தை, அழைப்பாணைச் சார்வு செய்தத் தேதிக்குப் பிறகு, 21 நாட்களுக்குள் நீங்கள் தாக்கல் செய்ய வேண்டும்.<br>• இந்த விண்ணப்பத்தில் உங்கள் அக்கறை மற்றும் எதிர்ப்பைத் தெரிவிக்க விரும்பும் காரணங்களை ஒரு சத்தியப் பிரமாணப் பத்திரத்தில் உள்ளடக்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். பிறகு, வழக்கு விசாரணை நடைபெறும்போது, நீதிமன்றத்தில் ஆஜராகி உங்கள் வாதங்களை முன்வைக்க வேண்டும். |




## நீங்கள் ஏன் எளிமையாக்கப்பட்ட செயல்முறையைத் தேர்வு செய்ய வேண்டும்?

- ✓ **செலவு:** குறைவான விண்ணப்பத் தாக்கல் செலவு.
- ✓ **நேரம்:** குறைவான பரிசீலனை நேரம்.
- ✓ **வசதி:** இணையவழி விண்ணப்பமும், மின்னஞ்சல் மூலம் தொடர்பும்.




## உங்கள் விண்ணப்பத்தைத் தாக்கல் செய்தல்

விண்ணப்பத்தை நீங்களாகவே நீதிமன்றத்திடம் தாக்கல் செய்யலாம் அல்லது வழக்கறிஞர் ஒருவரை உங்களை பிரதிநிதிக்க நியமிக்கலாம். விண்ணப்பத்தை நீங்களே தாக்கல் செய்ய விரும்பினால், அனைத்து சட்டபூர்வமான தேவைகளும் செயல்முறை தேவைகளும் பின்பற்றப்பட வேண்டும். உங்கள் விண்ணப்பத்தைப் பொருட்டு என்ன கூறவேண்டும் அல்லது செய்ய வேண்டும் போன்ற எந்தவொரு சட்ட ஆலோசனையும் குடும்ப நீதிமன்றங்கள் தர இயலாது. சட்டபூர்வமான தேவைகளும் செயல்முறை தேவைகளும் பற்றி உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை என்றால், நீங்கள் சட்ட ஆலோசனைக்காக வழக்கறிஞர் ஒருவரை நாடலாம்.

**CrimsonLogic Service Bureau** (வழக்கமான செயல்முறை)

1 Havelock Square
Level 2, State Courts
Singapore 059724
தொலைபேசி எண்: 6538 9507

*திங்கள் முதல் வெள்ளி*
காலை 8:30 முதல் மாலை 5 வரை
சனி: காலை 8:30 முதல் மதியம் 12:30 வரை
ஞாயிறு, பொது விடுமுறை நாட்களில் மூடப்பட்டிருக்கும்

**iFAMS –** (மின் விண்ணப்பத் தாக்கல் முறை)
(எளிமையாக்கப்பட்ட செயல்முறை)
இணையத்தளம்: https://ifams.gov.sg

iFAMS

## வழிகாட்டியைப் புரிந்துகொள்தல்

**சத்தியப் பிரமாணப் பத்திரம்:**
உங்கள் வழக்கை பற்றிய உண்மைகளை முறைப்படி விவரிக்கும் எழுத்துவடிவிலான வாக்குமூலம்.

**முதலேட்பு அழைப்பாணைகள்:**
ஒரு சிவில் வழக்கு நடவடிக்கையைத் தொடங்குவதற்கான இரு முறைகளுள் ஒன்று.

**துணை அதிகாரம் பெறுநர்:**
மனநல ஆற்றல் குறை உள்ளவரின் சார்பாகச் செயல்பட, நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஒருவர் ("பி").

**பொதுக் காப்பாளர்:**
நீண்டகால அதிகாரப் பத்திரப் பதிவேட்டை அமைத்துக் கொடுக்கவும், அதைப் பராமரிப்புச் செய்யவும் நியமிக்கப்பட்ட ஓர் அதிகாரி. இவர் நீதிமன்றம் நியமனம் செய்த துணை அதிகாரப் பெறுநர்களையும் மேற்பார்வையிடுவார்.

**அதிகாரம் பெறுநர்:**
நீண்டகால அதிகாரப் பத்திரப்படி, அதிகாரம் வழங்குநர் சார்பாக முடிவுகளை எடுப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டவர்.

**தொடர்புடையவர்கள்:**
இவர்கள், நோயாளியின் வாழ்வில் சம்பந்தப்பட்டவராகவும் மற்றும்/அல்லது, விண்ணப்பத்தில் அக்கறை கொண்டிருக்கக்கூடியவர்களாகவும் இருப்பர். பெரும்பாலும் இவர்கள் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களாவர். ஆனால் ஒவ்வொரு வழக்கின் சூழலைப்பொறுத்து, தூரத்து உறவினரும், குடும்ப உறுப்பினர் அல்லாதவர்களும் கூட 'தொடர்புடையவர்கள்' எனக் கருதப்படுவர்.

**அதிகாரம் வழங்குநர்:**
வருங்காலத்தில் மனநல ஆற்றல் குன்றும் தருவாயில் நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் கீழ் தனக்குச் சார்பாக முடிவெடுக்க, ஒரு நபருக்கு அதிகாரம் அளிப்பவர்.

---

பொறுப்புத் துறப்பு:

- பாய்வு விளக்கப்படம் வழக்கமான செயல்முறைகளை மட்டுமே குறிக்கிறது. எந்நேரத்திலும் சிறந்த நடவடிக்கைகளை ஆணையிடுவதற்கு நீதிபதிக்கு முழு விருப்புரிமை உள்ளது.
- இந்த வெளியீடு பொதுவான தகவலுக்காக மட்டுமே தயாரிக்கப்படுகிறது. மேலும் எந்தவொரு தனிப்பட்ட வழக்கையும் பற்றிய எந்தவொரு சட்ட ஆலோசனையோ அல்லது குறிப்பிட்ட ஆலோசனையோ கொண்டிருக்கவில்லை.
- இந்த வெளியீட்டின் உள்ளடக்கங்கள் தொடர்பாக எந்தவொரு மற்றும் அனைத்து பொறுப்புகளையும் குடும்ப நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாது.
- உங்களுக்கு ஐயம் இருப்பின், எப்போதும் சட்ட ஆலோசனையை நாடவும்.

FAMILY JUSTICE COURTS
SINGAPORE